**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.21/2016**

2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.06.2025 | தகப்பனார் பெயர்: | வீராசாமி |
| பெயர்: | செந்தில்<br>(DW-2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருநன்றியூர் | சமயம்: | |
| தொழில்: | மெக்கானிக் | வயது : | 46/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 24.06.2025</u>**

1. வாதி, பிரதிவாதி சொத்துக்கள் திருநன்றியூர் மேலத்தெருவில் உள்ளது. வாதிசொத்து வடபுறமும், பிரதிவாதி சொத்து தென்புறமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதியின் சொத்து என்பது ஓட்டு வீடு. பிரதிவாதியின் சொத்து ஏற்கனவே ஓட்டுவீடாக இருந்து அதனை இடித்துவிட்டு மாடி வீட்டு கட்டியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தின் எல்லையை குறிப்பதற்காக ஏற்கனவே மாடி வீடு கட்டும்போது இடிக்கப்பட்ட ஓட்டு வீட்டின் வடபுற சுவரின் ஒரு பகுதியை மட்டும் விட்டு வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சுவர்தான் வாதி மற்றும் பிரதிவாதிகள் சொத்தை பிரிப்பதற்கான அத்து என்றால் சரிதான். மேற்படி சுவர் மட்டும் தனியாக உள்ளது என்றால் சரிதான்.

2. வாதி, பிரதிவாதி இரண்டு பேர்களின் வீட்டு வாசல் என்பது மேற்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்தின் நீளம். அகலம் பற்றி எனக்கு தெரியாது. அதன் சர்வே எண்ணும் தெரியாது. வழக்கு சொத்திற்கு மேற்கே மேலதெரு உள்ளது. கிழக்கில் மெயின்ரோடு உள்ளது. தெற்கு பிரதிவாதிகளின் மனைக்கட்டு மற்றும் வீடு, வடக்கு லட்சுமி மற்றும் செல்வராஜ்

அவர்களின் வீடு மற்றும் மனை உள்ளது. பிரதிவாதிகள் வீடு கட்டி சுமார் எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 4 வருடங்கள் இருக்கும் . 2023–ல் தான் அவர் அந்த வீட்டிற்கு குடிபெயர்ந்தார் என்றால் சரிதான். சின்னதுரை என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 6 அடி இடம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. வாதி, பிரதிவாதிகளின் சொத்திற்கு இடையே உள்ள சந்து பொது சந்து என்பதற்கான ஏதேனும் ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் வாங்கிய கிரய பத்திரத்தை நான் பார்த்ததில்லை. மேற்படி சொத்தின் வருவாய்துறை ஆவணங்கள், புல வரைபடங்கள் இவற்றை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி அவரது வீட்டின் தென் புறத்தில் சுமார் 6 அடி அகலம் இடம் விட்டு அவரது பயன்பாட்டிற்காக விட்டு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 6அடி அகலம் உள்ள இடம் தனக்கு சொந்தமானது என பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4. மேற்படி 6 அடி இடத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றாலும் பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்காக அவர்களுக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கேட்டுள்ள படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல்

**<u>மறு விசாரணை இல்லை.</u>**